# முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின் கீழான தாபரிப்பும் அதன் நடைமுறைகளும்: கல்முனை காழி நீதிமன்றத்தை மையப்படுத்திய தற்கால நோக்கு

M. Imthisa Hassan

*Development Officer (Mediation)*

*(Former Asst.Lecturer in Islaimic Studies in FIA)*

*mhimthisa@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

*இலங்கை முஸலிம் தனியார் சட்டத்தின் கீழான முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின் பிரிவு 47(1) பிரிவானது பராமரிப்பு நடைமுறைகள் தொடர்பாக தெளிவாகப் பேசுகிறது. மண விலக்கின் போது மனைவி பிள்ளைகள் சார்பில் கோரப்படும் தொகையை கணவன் தனது பொருளாதார வசதிகளுக்கேற்ப பராமரிப்புத் தொகையாக வழங்க வேண்டும். இப்பராமரிப்பை பெற்றக்கொடுக்கும் அதிகாரம் காழிகளுக்கே வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக காழி நீதிமன்றங்களில் பெண்கள் பாதிக்கப்படுவது அதிகம் என்ற கருத்து வலுப்பெற்று வருகின்றது. இதனால் முஸ்லிம் பெண் உரிமை செயற்பாட்டாளர்கள் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தை பொறுத்தமட்டில் ஒரு போராட்ட குழு ஒன்றையே உருவாக்கி இருக்கிறார்கள். அவர்களுடைய ஊடகக் குரல்கள் முஸ்லிம் சிவில் சமூக அமைப்பை விழிப்படையச் செய்துள்ளன. அதனால் இன்று காழி நீதிமன்றங்களை அகற்றுமாறும், திருத்தம் செய்யுமாறும் கோஷங்கள் எழுப்புமளவு நிலை மாறியுள்ளது. இவற்றின் சரியான நிலை குறித்து அறிய பிரதேச ரீதியான காழி நீதிமன்றங்களின் பராமரிப்பு நடைமுறைகள் குறித்த ஆய்வுகள் அவசியப்படுகின்றன. அப்போதுதான் குறித்த பகுதிகளில் அதன் நிலை தொடர்பான தெளிவுகளைப் பெற்றுக்கொண்டு எங்கு மாற்றங்கள் தேவை? முறையான செயற்படுகின்றதா? இல்லையா? என்ற முன்மொழிவுகளுக்கு வரமுடியும். இதனடிப்படையில்தான் கல்முனைப் பிரதேசத்தில் இயங்கி வரும் காழி நீதிமன்றத்தின் பராமரிப்பு நடைமுறைகளை எந்தளவு தூரம் செயற்படுகின்றது என்பதை பரிசீலக்கும் வகையிலே இவ்வாய்வு அமைந்துள்ளது. புண்பு ரீதியானதும் அளவு ரீதியானதமான ஆய்வு முறையியல் அடிப்படையில் கல்முனை காழி நீதிபதியுடனான நேர்காணல், பராமரிப்பு பெறும் குடும்பங்களுடனான தரவு சேகரித்தல் மற்றும் பிரதேச செயலக பதிவாளர் பிரிவின் விவாகரத்து அறிக்கைகள் தொடர்பான தகவல்களை கொண்டு 2019-2021 வரையிலான பராமரிப்ப வழக்ககளின் பகுப்பாய்வுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு முடிவகளைப் பெறும் நோக்கில் மெற்கொள்ளப்படுகின்றன.*

**திறவுச் சொற்கள்**: *இலங்கை முஸ்லிம் தனியார் சட்டம், கல்முனை, காழி நீதிமன்றம், பராமரிப்பு தொகை, முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம்*

---

## *1.* ஆய்வு அறிமுகம்

*பன்மைத்துவமாக மக்கள் இணைந்து வாழும் இலங்கைச் சூழலில் முஸ்லிம் மக்களது மார்க்க மற்றும் சட்ட ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஆரம்பகால முயற்சிகளின் பலனாக 1951ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கான தனியார் சட்டம் அங்கீகரிக்கப்பட்டு 1957 ஆண்டு ஆகஸ்ட்*


ISBN: 978-624-5736-55-3

*மாதம் முதலாம் திகதி சில திருத்தங்களுடன் முஸ்லிம் தனியார் சட்டமாக இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகின்றது. அதில் ஆள்சார் சட்டமே பராமரிப்புத் தொடர்பாக பேசுகிறது. கணவன் என்பவன் மனைவியை பராமரிக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் பொதுவான விதியாகும். உணவு, உடை, உறையுள், வீட்டுப்பணி, சேவகம் மற்றும் மருத்துவ வசதிகள் அனைத்தையும் உள்ளடக்கிய வாழ்வாதாரத் தேவையை அவள் செல்வம் உள்ளவளாக இருந்தாலும் வழங்குதல் கடமையாகும். "தவிர தலாக் கூறப்பட்ட பெண்களுக்கு முறைப்படி பராமரிப்பு பெறத் தகுதியுண்டு"(அல்பகறா:241) என்ற அல்குர்ஆன் வசனம் குறிப்பிடுவது அதன் முக்கியத்தவத்தை வலியுறுத்துகிறது. முஸ்லிம் தனியார் சட்டம் அதனை ஒரு பெண் பெற்றுக் கொள்வதற்கான சகல வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளது. முஸ்லிம் விவாக, விவாக விலக்கு சட்டத்திதின் பிரிவு 47(1) இன் படி ஒரு மனைவியினால் மண விலக்கு, இத்தாக் காலப்பகுதி, மண விலக்கின் போது கர்ப்பிணியாக இருப்பின் பிள்ளையை பெறும் காலம்வரை போன்ற அனைத்து காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பராமரிப்பு செலவை பெற்றக் கொள்வது தொடர்பாக குறிப்படுகின்றது.*

*இச்சட்ட 47(1)(எ) பிரிவின்படி மணவிலக்க பெற்ற மனைவியின் பிரசவச் செலவுகள், பிள்ளைக்கான பராமரிப்பபு தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளதை அவதானிக்கலாம். பிரிவு 47(1) இன் படி பராமரிப்பத் தொகையை கூட்டுவதற்கோ அல்லது குறைப்பதற்குமான அதிகாரம் காழிக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று கணவனின் பொருளாதார வசதிகள் குறைகின்ற போது பராமரிப்பு தொகையை குறைக்கவும் முடியும். மனைவியின் பராமரிப்பு விடயத்தை கணவன் தட்டிக்கழிக்கின்ற போது கணவனின் சொத்துக்களில் இருந்து அவளுக்கான வசதிகளை பெற்றுக் கொள்ளவும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். ஒரு பெண் கணவனின் அனுமதியின்றி வீட்டை விட்டு வெளியேறினாலோ, இஸ்லாத்தை விட்டு நீங்கினாலோ, மனைவி கீழ்படியாத குணம் கொண்டிருந்தாலோ கணவன் அவளைப் பராமரிக்க வேண்டிய அவசியமில்லை. குல்உ நடந்தாலும் பராமரிப்பு அவசியமில்லை. ( றவூப் செயின், 2021). வசதிகளுள்ள தந்தை ஆண் பிள்ளை பருவம் அடையும் வரையும், நோய் அல்லது பலவீனம் உள்ள பிள்ளைகள் எனின் தொடர்ந்தும் பராமரிக்க வேண்டும். பெண் பிள்ளைகளாயின் திருமணம் முடிக்கும் வரை பராமரிக்க வேண்டும். தந்தை அதில் அசிரத்தையாக இருந்தால் அவரிடம் பராமரிப்பு கோருவதற்கு பிள்ளைகளுக்கு உரிமையுண்டு.*

*ஆனாலும் இது குறிப்பிட்டளவான தொகையில்லாமல் அன்பளிப்புத் தொகையாக அல்லது இழப்பீட்டுத் தொகையாக மொத்தமாக வழங்குமாறு குர்ஆன் பணிக்கிறது. ஆனாலும் 1951ம் ஆண்டின் தனியார் சட்டத்தில் இஸ்லாம் அனுமதிக்காத சீதனம் மற்றும் கைக்கூலி உள்ளடக்கப்பட்ட அதே நேரம் அல்குர்ஆன் கடமையாக்கிய மதாஉ உள்ளடக்கப்படாமை பெரும் துரதிஷ்டமாகும். இழப்பிட்டு தொகை கணிசமானதாக அமைவதால் மணவிலக்கப் பெறும் பெண் அதன் மூலம் வருமானம் ஈட்ட முற்படுவாள். பராமரிப்புச் செலவு சில வேளைகளில் போதாமையாகவும், உரிய நேரத்திற்கு வழங்காத சூழலில் அவளது நிலையின் நிர்க்கதி குறித்தே அல்குர்ஆன் மதாஹ்வை வழங்குமாறு பணித்தது. ஆனபோதிலும் இது நடைமுறையில் இல்லாத போதும் விவாகரத்துப் பெறும் பெண்களுக்காக தமக்குள்ள தற்துணிவின் பேரில் ஒரு தொகைப் பணத்தை காழி நீதிபதிகள் தீர்த்து பராமரிப்புச் செலவாக பெற்றும் கொடுகின்றனர்.*

*இலங்கை ஒரு பன்மைத்துவ நாடு என்ற வகையில் பௌத்த, கிறிஸ்தவ மற்றும் இந்து மக்களுக்கான ஏற்பாட்டில் விவாகரத்தின் போதான ஜீவனாம்சத் தொகையானதை ஒரேயடியாக பெற்றுக்கொள்ளும் நிலையை அவதானிக்கலாம்.*

*இலங்கையைப் பொறுத்தவரை பொதுச்சட்டத்தில் திருமணம் அமுலில் உள்ள காலத்தில் ஈட்டப்பட்ட சொத்துக்களில் இருவருக்கும் சமபங்கு உள்ளதாக குறிப்பிடுகிறது. இலங்கையில் முஸ்லிம் தனியார் சட்டத்தின் பராமரிப்புச் சட்ட ஏற்பாடுகள் நிலையானதாக காணப்பட்ட போதிலும் இன்றைய காழி நீதிமன்றங்களின் போக்கு மற்றும் நடைமுறைகள் திருப்பித்தியளிக்கும் வகையில் அமையவில்லை என்ற குற்றச்சாட்டுகள் பரவலாக எழுந்துள்ளன. பராமரிப்புத் தொடர்பான சட்டங்கள் முறையாக நடத்தப்படாமை தொடர்பிலும் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.*

*கணவன் மனைவிக்காக குறிப்பாக காழி நீதிமன்றங்களில் பெண்கள் பாதிக்கப்படுவது அதிகம் என்ற கருத்து வலுப்பெற்று பல பிரதேசங்களில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அதனை வெளிக்கொண்டும் வருகின்றன. அந்த கருத்தாடல்களின் பின்னணியில் கிழக்கு மாகாணத்தின் அம்பாரை மாவட்டத்தின் முஸ்லிம்கள் செறிந்து வாழும் கல்முனை, நற்பட்டிமுனை, மருதமுனை, பெரியநீலாவணை ஆகிய பிரேதேச மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கல்முனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்முனை காழி நீதிமன்றத்தின் பாரமரிப்பு நடைமுறை தொடர்பான அமுலாக்கம் குறித்து பரிசீலனை செய்து ஆய்வு முடிவுகளை பெறவே இவ்வாய்வு விளைகிறது.*

## *2. **ஆய்வுப் பின்னணி***

*இலங்கை பன்மை சமுகங்களை கொண்ட ஒரு நாடு என்ற வகையில் பல்வேறு இனக்குழுக்கள் தத்தம் சமய கலாசார அடையாளங்களோடு தனித்துவங்களோடு வாழ்ந்து வருகின்றன. குறிப்பாக காழி நீதிமன்றங்களில் பெண்கள் பாதிக்கப்படுவது அதிகம் என்ற கருத்து வலுப்பெற்று வருகின்றது. இந்த விழிப்புணர்வினால் உந்தப்பட்ட நிலையில் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் தொடர்பான விடயங்களில் பெண்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிப்படைய செய்யும் விடயங்களை இணங்கண்டு அவற்றில் ஏற்படும் முரண்பாடுகள் எந்தளவு தூரம் அவர்களது அன்றாட வாழ்வியலில் தாக்கம் செலுத்துகின்றது என்பதை ஆராய்வதை பின்னணியாகவும் கொண்டுள்ளது.*

*நியாயாதிக்கத்தை தன்னகத்தே கொண்ட காழி நீதிபதிகள் பெண்கள் தொடர்பாக நடந்து கொள்ளும் தன்மைகளை ஆராய்ந்து அதனை ஓர் ஒழுங்கக்குள் கொண்டு வருவதற்கான ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் முன்வைப்பதை பின்னணியாகக் கொண்டுள்ளது. முஸ்லிம்களின் சமூக அமைப்பில் தனியார் சட்ட அமுலாக்கல் தொடர்பில் எழுந்துள்ள முரண்பாடுகள் மேலும் கூர்மையடையாமல் ஓரளவுக்காவது திசைமுகப்படுத்தப்பட்டு விவாக விவாகரத்து தொடர்பான பெண் தரப்பு கோரிக்கைகள் குறைபாடுகள் எவை என்பதை இனங்காண்டு முகாமைத்தவம் செய்வதற்கான முன்னொழிவுகளுக்கான பின்னணியில் ஒரு முயற்சியாக இந்த ஆய்வு அமைகிறது.*


ISBN: 978-624-5736-55-3

### *3. ஆய்வு நோக்கம்*

*பராமரிப்புத் தொடர்பாக இஸ்லாம் அதன் நடைமுறைகளை வழிகாட்டல்களாக வழங்கியுள்ளது போன்று எமது பிரதேசங்களில் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றதா?என்பதை ஆராய்வதை பிரதானமாகக் கொண்டுள்ளது. அதன் நடைமுறை சிக்கல்கள் எவை? என்பதை அறிவதை துணை நோக்காகமா கொண்டுள்ளது. ஆராயச்சி ரீதியாகவோஇ விஞ்ஞான ரீதியாகவோ எமது பிரதேசங்களில் மேற்கொள்ளப்படாத ஆய்வு இடைவெளியை பூர்த்தி செய்வதையும் நோக்கக் கொண்டுள்ளது.*

*முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின் கீழான தாபரிப்பு நடைமுறைகள் எவ்வாறு செயற்படுகின்றது என்பதை பரிசீலித்தலும் ஆராய்தலும்.*

### *4. ஆய்வுப் பிரச்சினை*

*பராமரிப்பு தொகை தொடர்பான தீர்மானங்களில் காழியாரின் பக்கச்சார்பானதாக நடந்துகொள்ளும் நடைமுறைகள். பராமரிப்புத் தொகையாக வழங்கப்படும் ஒதுக்கீடு போதாமையும் முறையாக உரிய காலகட்டத்தில் கிடைக்காமையும்.*

### *5. ஆய்வு முறையியல்*

*இவ்வாய்வானது பண்பு ரீதியானதும் அளவு ரீதியானதுமான ஆய்வு முறையியலை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்முனை பிரதேச காழி நீதிமன்றத்தினால் 2017.02.17 தொடக்கம் 2021.03.13 வரையான காலப்பகுதிக்குள் 296 விவாகரத்து வழக்குகள் பதியப்பட்டுள்ளன. இவ்வாய்வு சனத்தொகையில் 2019-2021 வரையிலான 3ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு தொடர்பான வழக்குகளை மையமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் எழுமாறாக 50 பராமரிப்புப் பெறும் குடும்பங்களை தெரிவு செய்து அவர்களுக்கான வினாக்கொத்து மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.*

*காழி நீதிபதியுடனான நேர்காணலும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. காழி நீதிமன்றத்தின் பாரமரிப்பு தொடர்பான ஆவணங்கள் மீளாய்வு செய்யப்படும். ஆய்வுக்கான கோட்பாட்டு அமைப்புத் திட்டத்தை நிறுவவதற்கு இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

### *6. முன்னைய ஆய்வுகளின் மீளாய்வு*

*மேற்கொள்ளப்படும் ஆய்வு தரமானதாவும் திறம்படவும் அமைய முன்னைய ஆய்வுகளின் கண்ணோட்டம் அவசியமானதாகும். அந்த வகையில் கலாநிதி அஷ்-ஷெய்க் மஹம்மது இஸ்மத் ரம்ஸி (நளிமி) அவர்கள் செய்த "முஸ்லிம் பெண்களின் திருமண வயதெல்லையும் நடைமுறையில் இருக்கும் தனியார் சட்டமும்-ஓர் இஸ்லாமிய நோக்கு" என்ற ஆய்வு முஸ்லிம் தனியார் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள திருமண வயதெல்லை முஸ்லிம் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டதா அல்லது ஷரீயாவை அடிப்படையாகக் கொண்டதா? என்பதனை ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது. "பெண் காழிகள் நியமனமும் இலங்கையில் அதன் அமுலாக்கமும் ஒரு சமகாலப் பார்வை" என்ற தலைப்பில் அஷ்-ஷெய்க் எஸ்.எம்.எம். மஸாஹிர் (நளிமி) அவர்கள் எழுதிய ஆய்வுக் கட்டுரையில் பெண் காழி நியமனம் இஸ்லாமிய ஷரீயாவுக்கு*

ஏற்புடையதாக அமையும் எனவும் இலங்கையில் அதனை நடைமுறைப்படுத்த முன்பு வேறு துணை விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

*"Muslim family law in srilanka, Theory, practice and issues on concern to women" MWRAF/WLUML.* என்ற கொடிகார சூளனி(2011), எழுதிய வெளியீடானது முஸ்லிம் தனியார் சட்டத்தின் பகுதிசார் பிரிவுகளை கோடிட்டுக்காட்டுவதாகவும் முஸ்லிம் தனியார் சட்டத்தின் பூரண விளக்கம் குறித்தும் பேசுகிறது. ஏர்மிசா டேகல், ஹஸனா சேகு இஸ்ஸத்தீன் இணைத்து மேற்கொண்ட "இலங்கையின் காதி நீதிமன்றங்களின் உள்ளே" என்ற ஆய்வானது புத்தளம் பிரதேச காதி நீதிமன்றத்தை மையப்படுத்தியதாகவும் அதன் தற்கால நடைமுறைகள் தொடர்பாகவும் அதன் இடம், அங்கு செல்லும் பயனாளிகளுக்கும் காதியாருக்குமிடையிலான தொடர்பாடல், காதி நீதிமன்ற மறுசிரமைப்புத் தொடர்பாகவும் விரிவாக ஆராய்ந்துள்ளது.

"இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தில் பராமரிப்பும் அதன் நடைமுறையும் - கற்பிட்டி காழி நீதிமன்றத்தை மையப்படுத்திய ஆய்வு" என்ற ஆய்வானது அஷ்-ஷெய்க் எஸ்.எம்.எம். மஸாஹிர் (நளிமி)இ எம்.என்.எப் சிமாரா என்பவர்கள் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. இது காழி நீதிமன்றங்களில் பராமரிப்பு சட்ட நடைமுறையில் காணப்படும் ஒருசில முறைகேடுகளை கண்ணடறிய உதவியதோடு எனது ஆய்வுக்கு தேவையான தகவல்களையும் தந்துள்ளது. ஆனாலும் மேற்குறிப்பிடப்பட்ட ஆய்வுகள் அனைத்துமே பொதுவான ஒரு பார்வையில் அமைந்துள்ளதே தவிர கல்முனைப்பிரதேச காழி நீதிமன்றத்தை மையமாகக் கொண்டோ அதிலுள்ள தாபரிப்பு வழக்ககள் தொடர்பான விடயங்களை மையப்படுத்திதாகவோ தெனுடைய தற்கால நிலமைகளை வெளிக்கொணர்வதாகவோ காணப்படவில்லை எனவே அந்த ஆய்வு இடைவெளியினை பூர்த்தி செய்வதாகவே இவ்வாய்வு அமையப்பெறும்.

### 7. ஆய்வுப் பிரதேசம்

அம்பாரை மாவட்டத்தில் அமைந்துள்ள கல்முனை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட 4 கிராமங்களை உள்ளடக்கிய 19.65 சதுர கிலோ மீற்றர் பகுதியை நிலப்பரப்பாக கொண்டு கல்முனை அடையாளப்படுத்தப்படுகிறது. இது கல்முனைக்குடி, மருதமுனை, நற்பாட்டிமுனை, பெரியநீலாவனை ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இக்கிராமங்களில் மொத்தமாக 2020/2021 ஆண்டு கணக்கெடுப்பின் படி 29 கிராம சேவகப் பிரிவுகளில் 15,856 குடும்பங்களில் மொத்தமாக 55,271 மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 21 சிங்கள மதத்தவரும் 46 தமிழர்களும் 55,212 முஸ்லிம்களும் இணைந்து வாழ்கின்றனர். இதில் 27,297 ஆண்களும் 27,915 பெண்களுமாக காணப்படுகின்றனர். (கல்முனை பிரதேச செயலக அறிக்கை 2020/2021). இங்கு முஸ்லிம்களே பெரும்பான்மையாக வாழ்ந்து வருவதை காணலாம்.

விவசாயம், மீன்பிடி, கைத்தறி, வணிகம் போன்ற தொழில்கள் மூலம் வருமானம் ஈட்டி வருகின்றனர். இப்பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கல்முனை (முஸ்லிம் பிரிவு) பகுதியில் இஸ்லமபாத் எனும் இடத்தில் காழி நீதிமன்றத்தின் தலைமை காரியாலயமானது அமைந்துள்ளது. இங்கு மேற்குறிப்பிட்ட முஸ்லிம் மக்களது விவாகம் மற்றும் விவாகரத்து தொடர்பான வழக்குகளை கையாள்கிறது.


ISBN: 978-624-5736-55-3

*7.1* ***கல்முனை காழி நீதிமன்றம்***

*அம்பாரை மாவட்ட முஸ்லிம்களது விவாக, விவாகரத்து தொடர்பான பிணக்குகளை தீர்க்கும் காழி நீதிமன்றங்கள் ஆரம்பகால கட்டங்களில் கரைவாகுப்பற்று என்ற ஒரே நீதிப்பரிபாலன முறைக்கு உட்படுத்தப்பட்டு இருந்தது. பின்னர் அது அக்கரைப்பற்று, கருங்கொடித் தீவுப்பற்று, சம்மாந்துறைப்பற்று, கல்முனை என நான்காகப் பிரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்போது பிரத்தியேகமாக ஒவ்வொரு பிரதேச செயலகங்களையும் மையப்படுத்தி நிர்வாகிக்கப்படுகிறது. இந்த வகையில் குறித்த ஆய்வுப்பிரதேசமான கல்முனை காழி நீதிமன்றத்தின் துவக்கம் 1954 ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு காணப்படுகின்றன. அந்த வகையில் தற்போது கல்முனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட 4 பிரதேசங்களை மையப்படுத்திய 29 கிராம சேவக பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 1954 ஆண்டு குறித்த காழி நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. ஆய்வுப் பிரதேச கல்முனை காழி நீதிமன்றத்தில். 2017-2021 வரையான காலப்பகுதியில் 296 பராமரிப்பு தொடர்பான வழக்குகள் எடுத்தாளப்பட்டுள்ளன. இவற்றில் எழுமாறாக 50 வழக்குகள் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.*

*7.2* ***பராமரிப்பு விசாரனைகளுக்கான காழி நீதிமன்ற நடைமுறைகள்***

*1951 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இலங்கை முஸ்லிம் திருமணஇ மண நீக்ககச் சட்டத்தின் பிரிவு 47(1) இன் பிரகாரம் கணவனால் முறையாக பராமரிக்கப்படாத மனைவி மற்றும் பிள்ளைகளுக்கான பராமரிப்புக்கான கோரிக்கையானது குறித்த மனைவி மற்றும் பிள்ளைகள் அல்லது அவர்களது சார்பில் எவரேனும் தான் வசிக்கின்ற பிரதேசத்தில் நியாயாதிக்கமுடைய காழி நீதிமன்றத்தில் விண்ணபிக்க வேண்டும்.*

*7.3* ***பாரமரிப்ரினைக் கோரி வழக்கினை தாக்கல் செய்தல்***

*ஒரு மனைவி தன் கணவனால் முறையாக பராமரிக்கப்படாத பட்சத்தில் அதனை முறையீடு செய்து காழி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாய்வுப் பிரதேசத்தில் வழக்குகள் எண்ணிக்கை அடிப்படையில் அதிகமாக காணப்படுவதால் பிள்ளைப் பராமரிப்பு வழக்குகள் அதிகளவில் கோரப்படுகின்றன. வழக்கு தாக்கல் செய்யும் போது குறித்த சில ஆவணங்கள் சமர்ப்பிப்பது அவசியமாகும்.*

*பராமரிப்பைக் கோரும் பெண்ணின் கடிதம், திருமணப் பதிவச் சான்றிதழ், பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ், தான் வசிக்கும் பள்ளிவாசல் அத்தாட்சிக் கடிதம், தேசிய அடையாள அட்டை பிரதி ஆகியவற்றை உண்மை என உறுதிப்படுத்தும் கிராம சேவகர் சான்று என்பவற்றை சமர்பிக்க வேண்டும் என்ற நடைமுறை ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகிறது. காழி நீதிமன்றங்களில் விண்ணப்பங்கள் நடைமுறையும் பின்பற்றப்படுகிறது. மனைவிக்கான பராமரிப்பு (WM), பிள்ளைத் தாபரிப்பு(CM), பிள்ளை பேறுக்கான விண்ணப்பம் (LE), இத்தா பராமரிப்புக்கான விண்ணப்பம் (IM) என்று பெயரிடப்பட்ட வடிவில் காழி உதவியாளரால் பதிவு செய்யப்படும். இத்தகைய விண்ணப்பங்கள் காழி நீதிபதியால் குறித்த திகதியில் விண்ணப்பம் வாசித்து காட்டப்பட்டு அவரது முன்னிலையில் விணிணப்பதாரியினால் கையப்பமிடப்படும். (நேர்காணல்: காழி நீதிபதி)*


ISBN: 978-624-5736-55-3

### *7.4* ***பிரதிவாதிக்கான அறிவித்தலை வழங்குதல்***

*பராமரிப்புத் தொடர்பான விண்ணப்பம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் காழியார் அவ்விசாரணைக்காக ஒரு திகதியை நிர்ணயிப்பார். விண்ணப்பித்திலிருந்து ஒரு மாத கால இடைவெளியின் பின்னரே விசாரணைக்கான திகதி தீர்மானிக்கப்படுகிறது. தீர்மாணித்த திகதியை இரண்டாம் திறத்தவருக்கு காழி நீதிபதியால் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது.*

*இதன் பின்னரே குறித்த திகதியில் இரண்டாம் திறத்தவர் சமூகமளிக்கும் போது விசாரணையானது இரு தரப்பும் பக்கம் சாராமல் மேற்கொள்ளப்படும். குறித்த தினத்தில் இரண்டாம் திறத்தவர் சமூகமளிக்காதவிடத்து அவரது கிராம சேவகர் ஊடாக அக்கட்டளை அனுப்பப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்க வேண்டுவதோடு அதனை குறித்த உத்தியோகத்தர் காழியாருக்கு உறுதிப்படுத்தவும் பொறுப்படையவராவார். அதிலும் இரண்டாம் தரப்பு சமூகமளிக்காத பட்டசத்தில் கிராம சேவகருக்கான அதே நடைமுறையை காழியார் குறித்த பிரதேச பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஊடாக அணுகச் செய்வார்.*

*இவ்வாறு குறித்த நபர் சமூகளிக்க மூன்று மாத காலம் அவகாசம் அறிவித்தல்கள் மூலம் வழங்கப்படும். அதிலும் சமூகமளிக்காவிடின் குறித்த நபர் நாட்டில் இல்லைஇ அல்லது குறித்த இடத்தில் இல்லை என்பது காழியாருக்கு அறியவரும் பட்சத்தில் அதனை அவர் உறுபடுத்திய பின்னர் பிரதிவாதியின் உறவினர்களிடம் அந்த அறிவித்தலை சேர்பிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பிரதிவாதிக்கு அறிவித்தல் வழங்கும் நடைமுறையில் திருமண விலக்கு சட்டத்தின் 4ஆம் பிரகாரம் அறிவித்தலை ஜீம்ஆ பள்ளியிலோ பிரதிவாதியின் நெருங்கிய உறவினர் வீட்டிலோ ஒட்டும் நடைமுறை இவ்வாய்வுப் பிரதேசத்தில் காணப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

### *7.5* ***பராமரிப்பு வழக்கினை விசாரனை செய்தல்***

*இரண்டு திறத்தவர்களும் விசாரனைக்காக தவணையிடப்பட்ட காலத்தில் சமூகமளிக்கும் போது அவர்களுக்கான விசாரணை மேற்கொள்ளப்படும். மனைவியின் கோரிக்கை கடிதத்தில் காணப்படும் விடயங்களை காழியார் உள்வாங்கிய நிலையில் குறித்த விடயம் தொடர்பான காரணிகளை கணவிடம் விசாரனை மேற்கொள்வார். இவ்விசாரணையின் போது கணவனின் வருமானத்தை ஆய்வு செய்து அதனை உறுதிப்படுத்திக் கொள்வார். தனக்கு வருமானம் இல்லை என்று கணவர் கூறும் பட்சத்தில் அவருடைய தேகாரோக்கிய (தொழில் செய்ய முடியாதளவு உடல் ஊனம் கொண்டவரா? ) நிலையை ஆராய்ந்து குறித்த தொகையினை தீர்மானிக்கும் நடைமுறை இங்கு காணப்படுகிறது. மனைவியின் குடும்பப் பின்னணி, பிள்ளைகளின் எண்ணிக்கை, பிள்ளைகளின் வயது, அவர்களது கல்வித் தேவை, மருத்துவத் தேவையுள்ள குறைபாடுடைய பிள்ளைகள் காணப்படுகின்றதா? மற்றும் கணவர் அரச தொழில் செய்யககூடியவரா? ஏன்பதை உறுதிப்படுத்தல் போன்ற வியடங்களை முதன்மைப்படுத்தியே குறித்த ஆய்வுப்பிரதேச பராமரிப்புக்கான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (நேர்காணல்: காழி நீதவான்)*

### *7.6* ***பராமரிப்பு வழக்கிற்கான தீர்ப்பினை வழங்கல்***

*மேற்குறிப்பிட்ட விசாரணைகளின் அடிப்படையில் இரண்டு திறத்தவர்களின் வாக்கு மூலங்களைக் கொண்டு கணவனின் வருமானத்தைக் அடிப்படையாகாக் கொண்டு காழியார்*


ISBN: 978-624-5736-55-3

*குறித்த தொகையினை தனது தற்துணிவின் பேரில் தீர்மானிப்பார். அரச தொழில் செய்பவராக கணவர் இருந்தால் 1/3 பங்குகளையும்இ வருடாவருடம் குறித்த மனைவி தன் பிள்ளைகளின் வயது கூடும் போது தேவைகளும் அதிகரிக்கும் காரணத்தால் பராமரிப்பு தொகையினை அதிகரிக்க விண்ணப்பம் கோர முடியும்.*

*அதற்கு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண்ணைக் குறிப்பிட்டு காழி நீதிபதி சமாதானத்தின் அடிப்படையில் தொகையினை அதிகரித்துக் கொடுக்கம் நடைமுறையும் ஆய்வுப் பிரதேசத்தில் காணக் கூடியதாகவுள்ளது. பஸ்கு செய்யப்பட்ட மனைவி தனக்கான வருமானம் இல்லை என்ற காரணத்தால் பராமரிப்புக் கோரி வழக்கு விண்ண்பித்தால் அவளுக்கு பிள்ளைகள் இல்லாவிட்டர்லும் அவளுக்கான பாரமரிப்புச் செலவு பெற்றுக் கொடுக்கும் நடைமுறையும் குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் அவதானிக்க முடிந்தது.*

*தீர்ப்புகள் வழங்கும் போது இரு திறத்தவரின் சமாதன நடைமுறைகளுடன் இத்தீர்ப்புகள் நடைபெறும். பிரதிவாதி தனது வருமானம் தொடர்பாக முரண்படும் பட்சத்தில் சில விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சில சாட்சிகள் மூலம், கிராம சேவகரின் ஊடாகவும், அரச ஊழியராக இருந்தால் அவருடைய சம்பள விபரப்பட்டியல் என்பவற்றை உறுதிப்படுத்தி மற்றும் காழி நீதிபதி குறித்த கணவரை முன்னிறுத்தி அவருடைய ஆரோக்கியம், உழைப்பின் தன்மைகளை ஆராய்ந்து காழி நீதிபதி தன் நியாயாதிக்கத்தின் கீழ் வழக்கினை தீர்க்கும் நிலை இங்கு உள்ளது.*

***1951**ஆம் ஆண்டின் முஸ்லிம் மண மற்றும் மண நீக்கச் சட்டத்தின் பிரிவு 36இன் பிரகாரம் பராமரிப்புத் தொகையானது குறித்த விண்ணப்பதாரரினால் விண்ணப்பித்த திகதியிலிருந்தே செலுத்தப்பட வேண்டும். இந்த நடைமுறையை ஆய்வப்பிரதேச காழி நீதிமன்றம் கடைபிடிக்கிறது. பராமிப்புக்காக தீர்கப்பட்ட வழக்குகள் என்றாலும் சில போது தொகை செலுத்தாமல் கால தாமதமாகும் பட்சத்தில் (**1**மாத கால இடைவெளி) கொடுத்து அவருக்கும் அது தொடர்பான அறிவித்தலை வழங்கிவிட்டு நீதிமன்றத்திற்கு அதனை அனுப்பி குறித்த தொகையை பெற்றுக் கொடுக்கம் நடைமுறையும் காணப்படுகிறது.*

*குறிப்பிட்ட திகதியில் பிரதிவாதியான கணவன் காழி நிதிமன்றம் வர தவறும் பட்சத்தில் பிரதிவாதிக்கு அறிவித்தல் கிடைத்ததை காழியார் உறுதிசெய்து கொண்டால் வழக்கினை தாக்கல் செய்த மனைவிக்கான பராமரிப்புத் தொடர்பான தகுதியை திருப்தியடைந்து அதற்கான தொகையினையும் தீர்மானித்து கட்டளையிடுகின்றார். சட்டத்தின் படி பிரதிவாதி காரணமெடுத்தக் காட்டல் அவசியமாகும். பிரதிவாதி நியாயமான காரணத்தால் சமுகமளிக்கவிலலை என்பதில் முரண்பாடு வருமிடத்து தீர்ப்பானது செல்லுபடியற்றதாக கொள்ளப்படுகிறது. மீண்டும் சமூகளித்தலின் போது உள்ள நடைமுறையில் குறித்த வழக்கு தொடரப்படும். இங்கு தகுந்த காரணங்களுக்கான சமுகளிக்காத நிலையே அதிகம் காணப்படும் அதே வேளை குறித்த பிரதிவாதி சமுகளிப்பதற்கான முன்னெடுப்புகள் மிகையாகவே மேற்கொள்ளப்படும் தன்மை அவதானிக்கப்பட்டது. பிரதிவாதிகள் வருகைதரத்தவறும் பட்சத்தில் அவருடைய உறவினர்களான தாய், தந்தை மற்றும் சகோதரர்கள் சமூகமளிப்பதனால் நிலைமைகள் சுமூகமாக நகரும் நிலை காணப்படுகிறது.*


ISBN: 978-624-5736-55-3

### *7.7* ***பிரதிவாதிக்கு காரணமெடுத்துக் காட்டும் அறிவித்தலை அனுப்புதல்***

*தீர்ப்பளிக்கப்பட்ட பராமரிப்புத் தொகையானது மதாந்தம் முறையாக காழி நீதிமன்றத்தில் செலுத்தப்படல் வேண்டும். 1மாதங்கள் தொடராக செலுத்தப்படாமல் நிலுவையாகுமானால் குறித்த பிரதிவாதிக்கு 15 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும் எனவும் அவ்வாறு செலுத்தப்படாத பட்சத்தில் நீதவான் நீதிமன்றத்திறகு எத்திவைக்கப்படும் என்பதாக குறிப்பிட்டு காழி நீதிபதியால் காரணம் காட்டும்* (Show – Cause Notice) *அறிவித்தல் அனுப்பப்படும். அதனை தொடர்ந்து பிரதிவாதி காழி நீதிமன்றம் சென்று தொகையை செலுத்தும் நிலை காணப்படுகிறது. பிரதிவாதி செலுத்த மறுத்து நீதவான் நீதிமன்றம் சென்று வழக்காடும் எண்ணம் கொண்டு சென்றாலும் நீதவான் எவ்வித விசாரணையும் மேற்கொள்ளாமல் பராமரிப்பு தொகை செலுத்துவதையே பிரதிவாதிக்கு வலுயுறுத்துவார். காழியார் தீர்த்த வழக்கினை மீள விசாரணை செய்யும் நடைமுறை நீதவான் நீதிமன்றத்தில் இல்லை (நேர்காணல்: காழி நீதவான்)*

*காழி நீதிமன்றத்தில் 1மாத அல்லது 2மாத காலம் பணம் செலுத்த தவறும் போதே அறிவித்தல் செல்வதால் நிலுவைத் தொகைகள் ஒப்பிட்டளவில் குறைவென்றே சொல்லலாம். அவ்வாறு நிலுவைகள் காணப்படும் பராமரிப்புத் தொகைகளை முழுமையாக பெற்றுக்கொடுக்கும் நடைமுறையும் காணப்படுகிறது. சில வேளை பிரதிவாதியின் கோரிக்கைகளுக்கிணங்க எஞ்சிய தொகைக்கான தவணைகள் காழியாரிடம் சமாதானமான முறையில் கோரப்படுமிடத்து தவணையிடப்படுகிறது.*

### *7.8* ***பராமரிப்பு தொடர்பான வலியுறுத்தற் கட்டளையை அனுப்புதல்***

*பராமரிப்பு வழக்கில் பிரதிவாதி தொடராக சமூகமளியாத போது வழக்கினைத் தீர்ந்து அதற்கான அறிவித்தல் அவருக்கு அனுப்பப்படும். அதற்கு அவர் உடன்பட்டால் செலவை காழி நீதிமன்றத்தில் செலுத்துவார். அலட்சியம் செய்யும் போது மனைவி காழியிடம் முறையிட்டால் பராமரிப்புத் தொகை தொடராக ஓர் இரு மாதம் செலுத்தப்படாதவிடத்து பிரதிவாதிக்கு அறிவித்தல் வழங்கப்படும். பிரதிவாதிக்கு அனுப்பபபட்ட (SCN) அறிவித்தலுக்கு 15 நாட்கள் அவகாசமும் வழங்கப்படும். அதற்கு பதில் கிடையாத போது வலியுறுத்தல் கட்டளையானது நீதவான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும். இவ்வலியுறுத்தல் கட்டளையில் வழக்கு எண், பிரதிவாதி விபரங்கள், அவர் செலுத்தத் தவறிய பராமரிப்புத் தொகையின் மொத்த தொகை ஆகிய விபரங்கள் அடங்கியிருக்கும். இதனை இரண்டு பிரதிகளிட்டு ஒன்று கோரிக்கை செய்தவருக்கும்இ மற்றையது காழி நீதிபதியின் குறித்த ஆவணத்திற்கும், அசல் பிரதி நீதவானுக்கும் அனுப்பப்படும். நேரடியாக கோரிக்கையாளர்களிடம் அதனை கொடுக்கும் போது அவர்கள் தொகைகளில் மாற்றம் செய்யும் தவறான வழிமுறைகளை களையவே அக்காழி நீதிமன்றம் அதனை செயற்படுத்துகிறது. (நேர்காணல்: காழி நீதவான்) இதனை உள்ளடக்கிய கோரிக்கை ஒன்றை காழி நீதிபதி விண்ணப்பம் செய்வார்.*

### *7.9* ***பராமரிப்பு பணத்தொகைக்கான பற்றுச் சீட்டினை வழங்கல்***

*இக்காழி நீதிமன்றத்தில் தீர்க்கப்பட்ட பிரதிவாதியின் பராமரிப்பு தொகையினை குறித்த கோரிக்கையாளருக்கு வழங்கும் போது அதனை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது. குறித்த பணத்தொகையை தான் பெற்றுக் கொண்டதாக காழியிடமிருந்து பணம் பெறுபவரால்*


ISBN: 978-624-5736-55-3

*கையெப்பம் இடப்படுகிறது. அதற்கான உறுதிப்படுத்தும் பற்றுச் சீட்டும் வழங்கப்பட்டு அதன் நகல் பிரதி காழியாரிடம் ஆவணப்படுத்தப்படுகிறது. ஏற்கனவே பராமரிப்புத் தொகையில் செலுத்தப்படாமல் காணப்படும் நிலுவையிலுள்ள தொகையே பிரதிவாதியால் செலுத்தப்படும் பணத்தொகையிலிருந்து கழிக்கப்படும். (நேர்காணல்: காழி நீதிபதி)*

*7.10* ***காழி நீதிபதியினால் வழங்கப்படும் கட்டளையை எழுதிவைத்தல்***

*இக்காழி நீதிமன்றத்தில் பராமரிப்பு தொடர்பான வழக்கானது விசாரணை செய்யப்படும் போது ஒவ்வொரு தவணை தொடர்பான விடயங்களையும் காழி நீதிபதியின் அலுவலக உதவியாளர் குறித்துக் கொள்வார். அதாவது குறித்த வழக்கு தாக்கல் செய்த திகதிஇ விசாரணைக்காக அழைத்த திகதிஇ வாதி பிரதிவாதி குறித்த தினத்தில் சமூகமளித்தாரா? இல்லையா?, காழியால் தவணையிடப்பட்ட திகதி, காழியால் சமாதானமாக்கப்பட்ட முயற்சிஇ காழியால் வழங்கப்பட்ட தீர்ப்பு, பராமரிப்புக்காக தீர்க்கப்பட்ட தொகை, அதனை செலுத்தும் திகதி, போன்ற ஆரம்பம் இருந்து முடிவு வரையான அனைத்து விடயங்களும் எழுதப்படுகின்றன.*

*8.* ***முடிவுரையும் பரிந்துரைகளும்***

*இலங்கை முஸ்லிம் விவாக விவாகரத்தது சட்டத்தின் கீழான பராமரிப்பு நடைமுறைகளை அவதானிக்குமிடத்து வழக்கு நடவடிக்கைகள் சுமூகமான வகையிலே நகர்ந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. பராமரிப்பு தொடர்பான வழக்குகளை காழியானவர் கையாளும் விதத்தைப் பொறுத்தவரை முதலாம் திறத்தவர் கோரிக்கைகள் உடனடியாக அமுல்நடத்தப்படுவதோடு இழு பறி நிலைகளை தொடர்ந்தும் தக்க வைக்கமல் நீதவான் நீதிமன்றத்தில் காலதாமதமின்றி கொண்டு செல்வதனூடாக பராமரிப்புத் தொகையை பெண்கள் தொடர்தேர்சியான வகையில் பெற்றுக் கொள்ளும் நிலை காணப்படுகிறது. ஏனைய பிரதேச காழி பராமரிப்பு நடவடிக்கைகளோடு ஒப்பிடுகையில் கல்முனை காழி நீதிமன்ற செயற்பாடுகள் சற்று முன்னேற்றமானதாகக் காணப்படுவதை அவதானிக்கலாம். இன்னும் பராமரிப்புத் தொடர்பாக தொகை தீர்மானிப்பில் நியாயமான காரணிகளை மையப்படுத்திய காழியார் நடந்த கொள்வது பெண்களுக்கான பக்கச் சார்பான நிலையை தளர்த்துவதாகவே அமைகிறது. ஆனபோதும் பராமரிப்பு தொகை நடைமுறைகளை விடவும் மதாஉ எனப்படும் குர்ஆனிய பராமரிப்பானது சிறப்பான பொறிமுறை என்றும் பெண் தரப்பின் தேவைகளை பூர்த்தி செய்ய ஏற்புடையது என்ற உண்மை காழி நீதிபதிகளாலே களத்தில் உணரப்படுவதையும் அவதானிக்கலாம்.*

*சட்ட நடைமுறையிலுள்ள சில மாற்றப்பட வேண்டிய பராமரிப்பு நடைமுறை தொடர்பான மீளாய்வுகளும் அவசியப்படுகின்றன. பெண் தரப்பின் விவாகரத்துகளின் அதிகரித்த தன்மையும் பராமரிப்பு நடைமுறைகள் முறையாக பின்பற்றப்படாமைக்கான உடனடிக்காரணம் என்றும் கூறலாம். விவாகரத்துப் பெற்றாலும் தன் குடும்பம் தன் பிள்ளைகள் என்ற மனிதாபிமான சிந்தனையோடு அவர்களுக்கான பராமரிப்புச் செலவினை சம்மந்தப்பட்ட ஆண்கள் உணர்ந்து செலுத்தாத வரை இதற்கான சிறந்த தீர்வுகளை எப்போதுமே பெற்றுக்கொள்ள முடியாது. இன்னும் காழி நீதிமன்ற பராமரிப்பு நடவடிக்கை தொடர்பான விழிப்புணர்வுகள் அடிமட்ட மக்களிலிருந்து ஏற்படுத்தப்படும் போது நிர்வாக ரீதியான குழறுபடிகளை ஆரம்பத்திலிருந்தே தடுக்க முடியும். இன்னும் பெண் காழிகளை பயிற்றுவித்து நியமிப்பதன் ஊடாகவும் பெண்களின்*


ISBN: 978-624-5736-55-3

*பாதிப்புக்கள் குறித்த சில நடைமுறை சிக்கல்களையும் பால் ரீதியான துஷ்பிரயோகங்களையும் தவிர்க்க முடியும். இல்லாத போது காழி நீதிமன்றங்களில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை சிலவற்றை வரையறுத்து அதனை பயிற்றுவித்து பெண்களுக்கு வழங்குவதனூடாகவும் விமர்சனங்கள் மற்றும் தவறான குற்றச்சாட்டுகளிலிருந்து விடுபடவும் வாய்ப்புள்ளது.*

*9.* ***உசாத்துணை நூல்கள்***


Nik Norihani Badlishah & Yasmin Masidi (2016), Women as judges, Muslim Women Research and Action Forum, Colombo.

Goonesekera Savitri (2000), Muslim Personal Law in srilanka, some aspects of the law on family relations, Muslim Women Research and Action Forum, Colombo.

Kodikara Chulani (2011), Muslim family law insrilanka, Theory, Practice and issueson concern to women, MWRAF/WLUML

*எம்.நவாஸ் சனூர்தீன் (2017), முஸ்லிம் தனியார் சட்டங்கள் பற்றிய அக, புறப் பார்வைகள் ஒரு சமகால நோக்கு, இஸ்லாமிய சிந்தனை. பேருவளை, நளீமியா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்.*

*எஸ்.எம்.எம்.மஸாஹிர் (2017), பெண் காழிகள் நியமனமும் இலங்கையில் அதன் அமுலாக்கமும் ஒரு சமகாலப் பார்வை, இஸ்லாமிய சிந்தனை, பேருவளை, நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்.*

*எஸ்.எம்.எம்.மஸாஹிர், எம்.என்.எப் சிமாரா (2014), இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தில் பராமரிப்பும் அதன் நடைமுறையும் - கற்பிட்டி காழி நீதிமன்றத்தை மையப்படுத்திய ஆய்வு, ஒலுவில், இஸ்லாமிய கற்கைகள் துறை, தென்கிழக்கு பல்கலைக் கழகம்.*

*ஏ.பீ.எம். அப்பாஸ் (2017), பலதார மணமும் இஸ்லாமும். நியாயங்களும் குற்றச்சாட்டுகளும், இஸ்லாமிய சிந்தனை, பேருவளை, நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்.*

*ஏர்மிசா டேகல், ஹஸனா சேகு இஸதீன் (2021), இலங்கையின் காதி நீதிமன்றங்களின் உள்ளே, சேன்ஜ் மனிதாபிமான நிறுவனம், புத்தளம்இ இலங்கை.*

*றவூப் செய்ன் (2021), முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் ஓர் இஸ்லாமிய நோக்கு, காத்தான்குடி ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியம்.*

*சலீம் மர்ஸ_ப் (2001), இலங்கை காழி நீதிமன்ற முறைமையும் முஸ்லிம் பெண்கள் மீதான அதன் தாக்கமும், கொழும்பு, முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி.*

*பிரதேச செயலகம் , கல்முனை (2021), வருடாந்த அறிக்கை.*